வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.4455/அ4/2024 நாள். .01.2025

-----

பொருள்: பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – அரசு/ உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளியில் பணிபுரியும் அறிவியல் ஆசிரியர்கள் – சிறந்த அறிவியல் ஆசிரியர்களுக்கான 2024–2025 ஆம் ஆண்டிற்கான "சிறந்த அவியில் ஆசிரியர் விருது" – நிகழ்நிலை நேர்காணல் மற்றும் கற்பித்தல் திறன் (Online interview and Teaching Efficiency Test) தேர்வு – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.192, உயர் கல்வித்(பி)துறை, நாள்.13.08.2018
2. சென்னை, பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய வளாகம் முதன்மைச் செயலர் கடித எண்.006/அந–சிஅ.ஆ.வி/அ.அ/2025, நாள்.09.01.2025

-----

பார்வை 1–இல் காணும் அரசாணைக்கிணங்க வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு/உயர்நிலை /மேல்நிலைப்பள்ளியில் பணிபுரியும் 2024–2025 ஆம் ஆண்டிற்கான சிறந்த அறிவியல் ஆசிரியர் விருதுகளுக்கான விண்ணப்பித்துள்ள ஆசிரியர்களின் விவரம் துறைகள் வாரியாகவும், தேர்வு நாள் மற்றும் நேரம் தங்களின் மேலான பார்வைக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

"சிறந்த அறிவியல் ஆசிரியர்" விருதிற்கான முக்கியத்துவம் மற்றும் சிறப்பினை கருத்திற்கொண்டு விருதிற்கு விண்ணப்பித்துள்ள ஆசிரியர்களிடம் வல்லுநர்கள் குழு நிகழ்நிலை நேர்காணல் மற்றும் கற்பித்தல் திறன் (Online interview and Teaching Efficiency Test) தேர்வினை அறிவியல் நகரத்தில் இருந்து கூகுள்மீட் (Googlemeet) வாயிலாக நடைபெறவுள்ளது.

எனவே, விண்ணப்பித்த அனைத்து ஆசிரியர்களும் இத்தேர்வில் கலந்துக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இவ்விருதிற்கு விண்ணப்பித்து அறிவியல் நகரத்தால் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்நிலை நேர்காணல் மற்றும் கற்பித்தல் திறன் (Online interview and Teaching Efficiency Test) தேர்வில் கலந்து கொள்ளாத ஆசிரியர்களின் விண்ணப்பத்தினை அறிவியல் நகரம் பரிசீலினைக்கு எடுத்துக் கொள்ளாது என்பதனையும் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :–
அறிவியல் ஆசிரியர் விருதுக்கான
ஆசிரியர்களுக்கான பெயர்பட்டியல்

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்:
தலைமையாசிரியர்,
அரசு/உயர்நிலை/மேல்நிலைப்பள்ளி,
வேலூர் மாவட்டம்.